# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அංක 14,554 — 1965 නොවැම්බර් 12 වැනි සිකුරාදා — 1965.11.12

14,554 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யப்படக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் —வெற்றிடம் .. .. .. | 361 | ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சை பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 362 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 366 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


### பதவிகள்—வெற்றிடம்

“இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்”

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைநூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலத்தோறும் பிறப்பிக்கும் வேறெதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குப்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அல்லது மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) “சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டு/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்” புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் எனும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) “புதிய உத்தியோகத்தர்” ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சைகால முடிவில் அவர்களின் நியமன வரிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர் ; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய நீடிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டதவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—“புது உத்தியோகத்தர்” என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சற்றுநிருபத்தின் உப பந்திகள் 2 (ii) (B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டியதகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். “இலங்கையர்” என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த

பதவியில் 1945 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற விதிகள்.—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அவரவரின் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக, முடிவுத் திகதியன்றோ அதன் முன்னரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிக்கப்படுவார்களா அன்று என்பதை கருமமுறைக் கோவையின் 109 ஆம் பிரமாண ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிட வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதற்கெனப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரைவிலக்கணம்.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்கா.

---

## தற்காலிக றப்பர் அளவையாளரைப் பதிவு செய்தல்

வெளிநாடுகளுக்கு அனுப்பும் றப்பரை அளவிடுவதற்கு பொருட் கொள்வனவுப் பகுதியில் றப்பர் அளவையாளராகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வேலை தற்காலிகமானது. பதிவு செய்வதன்மூலம் அரசாங்கத்திடம் நிரந்தரமான வேலையை எதிர்பார்க்க எவ்வித உரித்தும் கிடையாது. இதற்கென வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் எனது கந்தோரில் பெற்று 1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் திகதியில் அன்று அல்லது அதற்குமுன் எனக்குக் கிடைக்கக் கூடியதாய் பதிவுத் தபால்மூலம் பொருட்கொள்வனவுக் கொமிஷனர், 4 வது மாடி, மில்லேஸ் கட்டடம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

4 வது மாடி,
மில்லேஸ் கட்டடம், கொழும்பு,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 5 ந் உ.

ஆ. சி. நவரத்தினராசா,
பொருட் கொள்வனவுக் கொமிஷனர்.

11–420—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரச விமானப் படை

இலங்கை அரச விமானப்படையின் கட்டுநாயக்க தளத்தின் விநியோக மும் பாவனைப் பரிபாலிப்பும் பிரிவில் பாவனைக்கு உதவற்ற தளபாடங் களும் பாசறை (Barrack) உபகரணங்களும் விற்பனைக்குண்டு. அவ்விற்பனைக்கான மெழுகிட்ட கேள்விகளைக் கொழும்பு பாசன் வீதி யிலுள்ள இலங்கை விமானப் படையின் தலைவர் 1965 திசம்பர் மாதம் 3 ந் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐக் கொழும்பு பாசன் வீதி யிலுள்ள விமானப் படைத்தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியாகவும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டிய பின்னரே கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும். கேள்விப் படிவங்கள் 1965 திசம்பர் மாதம் 2 ந் திகதி நண்பகல் 12 மணிவரை கொடுக்கப் படும்.

3. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளாக உறையிலிட்டு மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல் - மூலையில் " பாவனைக்கு உதவற்ற தளபாடங்களும் பாசறை உபகரணங்களும் விற்பனைக்கான கேள்வி—முடிவு திகதி 3.12.1965 " எனக் குறிப்பிட்டு விமானப்படைத் தலைவர், இலங்கை அரச விமானப்படை, பாசன் வீதி, கொழும்பு என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும்.

4. முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட திகதி, நேரம், இடத்தில் கேள்விகள் பரிசீலனை செய்யப்படும். அவ்வேளையில் கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விக்காரர்களில் யாரா யினும் கேள்விகளில் எதையேனும் பார்வையிட விரும்பின் விமானப் படைத் தலைவருடன் அதற்கான ஒழுங்கைச்செய்து அக்கேள்வியின் பிரதியைப் பார்வையிடலாம்.

ஈ. ஆர். அமரசேகரா,
எயர் கொமடோர்,
விமானப் படையின் தலைவர்.

11–393—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## நீர்ப்பாசன இலாகா

### புத்தளம்

1.10.1965 ம் வெளியாகிய (நம்பர் 14,519) அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் அலிபனைமாவ கவோத்திட்டத்தின் கட்டிட வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணி வரைக்கும் நீடிக்கப் பட்டுள்ளது.

கேள்விக்காய வெற்றுப்பத்திரங்கள் 19.11.65, மாலை 4.30 மணி வரைக் கும் வழங்கப்படும்.

எம். எம். சிவப்பிரகாசம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
உப பிரிவு, புத்தளம்.

புத்தளம்,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 2 ந் உ.

11–332—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

## சௌக்கிய திணைக்களம்

## பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும் :—1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ந் திகதி 1966 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம் :**— கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு பிறின்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்ப வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள் :**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிருபணத்தையோ அளிக்கத்தவறினல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள் :**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை :**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல் :**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல் :**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக் காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர் தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல் :**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பி " அட்டவணையிற கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சி " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனுல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலக்கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட விதங்கள் செல்லுபடி :**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள் :**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை :**—இடவசதி : தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள் :**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்கள் நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

புத்தளம்,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 2 ந் உ.

ட. எ. தாமோதரம்,
சௌக்கிய சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| தாபனங்கள் புத்தளப் பகுதி | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள்: வேலைக்காரர்கள் — மீன் | வேலைக்காரர்கள் — மாட் டிறைச்சி | வேலைக்காரர்கள் — கரு வாடு | வேலைக்காரர்கள் — காய் கறி | நோயாளிகள் — மீன் | நோயாளிகள் — மாட் டிறைச்சி | நோயாளிகள் — கரு வாடு | நோயாளிகள் — காய் கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கல்பிட்டி வைத்தியசாலை | 100 | 800 | 30.11.65 காலை பத்து மணி | 500 | 500 | 500 | 2,000 | 1,000 | 1,000 | 1,000 | 4,200 |
| கொட்டுக்கச்சி வைத்தியசாலை | 100 | 800 | | 250 | 250 | 250 | 1,000 | 650 | 600 | 650 | 2,500 |
| மகாகும்புக்கடவல பிரசவ விடுதி | 100 | 300 | | 150 | — | 300 | 600 | 50 | — | 50 | 100 |
| மாம்புரி பிரசவ விடுதி | 100 | 300 | | 250 | 250 | 250 | 1,000 | 200 | 150 | 150 | 650 |
| நாவத்தகம வைத்தியசாலை | 100 | 600 | | 400 | — | 850 | 1,700 | 650 | — | 1,350 | 2,700 |
| மாதம்பை பிரசவ விடுதி | 100 | 300 | | 150 | 150 | 150 | 500 | 400 | 400 | 400 | 1,500 |

11-325—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

## சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.—1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் திசெம்பர் மாதம் 31 ம் திகதி 1966 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லாத இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து பகுதிப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) கேள்விக் கட்டுப்பணம்.—ரூபா 100 பெறுமதியான வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

(ii) கேள்விப் பத்திரங்கள்.—கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் எனது அலுவலகத்திலும் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முதல் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப் பணப் பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினுல் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

3. பெறுமதி விபரங்கள்.—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்குமுன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

4. தொகைகள்.—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முறை.—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ செயலாளர்/கணக்காளரிடமோ கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. கேள்விகள் மூடப்படுதல்.—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. கேள்விகள் திறக்கப்படுதல்.—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர் தான், சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.—கேள்விப் படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "ஸீ" யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களை குறிப்பிடவேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. பிணை வைப்புப்பணங்கள்.—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தை கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. களஞ்சியத்திடுகை இடவசதி.—தேர்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. கேள்வி நிபந்தனைகள்.—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

மட்டக்களப்பு,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 4 ந் உ.

பொ. நடராசா,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| (1) தாபனங்கள் | (2) கேள்விக் கட்டுப் பணம் ரூபா | (3) பிணை வைப்புப் பணம் ரூபா | (4) கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | (5) உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள்: மீன் | வேலைக்காரர்கள்: மாட்டிறைச்சி | வேலைக்காரர்கள்: கருவாடு | வேலைக்காரர்கள்: காய்கறி | நோயாளிகள்: மீன் | நோயாளிகள்: மாட்டிறைச்சி | நோயாளிகள்: கருவாடு | நோயாளிகள்: காய்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அக்கரைப்பற்று வைத்தியசாலை | 100 | 600 | | 450 | — | 800 | 1,500 | 600 | — | 1,400 | 3,000 |
| 2. அக்கரைப்பற்று பிரசவ விடுதி | 100 | 300 | | 200 | — | 450 | 850 | 120 | — | 400 | 750 |
| 3. களுவாஞ்சிக்குடி பிரசவ விடுதி | 100 | 400 | 2.12.65 | 100 | — | 50 | 120 | 450 | — | 350 | 1,200 |
| 4. லகுகலை பிரசவ விடுதி | 100 | 400 | காலை | 200 | — | 400 | 800 | 100 | — | 150 | 250 |
| 5. நாவற்காடு பிரசவ விடுதி | 100 | 400 | 10 | 200 | — | 500 | 1,000 | 300 | — | 450 | 900 |
| 6. நிந்தாவூர் பிரசவ விடுதி | 100 | 300 | மணி | 180 | — | 120 | 400 | 50 | — | 100 | 150 |
| 7. பொத்துவில் வைத்தியசாலை | 100 | 400 | | 250 | — | 600 | 1,000 | 350 | — | 800 | 1,600 |
| 8. திருக்கோவில் பிரசவ விடுதி | 100 | 300 | | 150 | — | 300 | 550 | 50 | — | 150 | 250 |
| 9. வாகரை பிரசவ விடுதி | 100 | 400 | | 120 | — | 200 | 300 | 200 | — | 600 | 1,200 |
| 10. எருவூர் வைத்தியசாலை | 100 | 600 | | 400 | — | 650 | 1,250 | 1,100 | — | 2,250 | 4,200 |

11—383—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,654

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கவுடுல்ல உபபிரிவு

கீழேகுறிப்பிட்ட வேலைகளுக்கு பொலன்னறுவ, வடகீழ் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 7.12.65 ம் காலை 10 மணி வரைக்கும் பதிவு செய்யப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களாலும், மற்றும் இவ் இலாகாவில் ரூபாய் 25,000 க்கு மேலும், ரூபாய் 30,000 மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபாய் 25 000 க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் உப. இ. (1) கேள்விப்பத்திரம் இல. கே. எல். 4 க்கும் ரூபாய் 30,000 க்கு மேல் பதிவு செய்யப்பட்டவர்கள் உப இல. (2) கேள்விப்பத்திரம் கே. எல். (5) ஒப்பந்தத்தை கேட்க அருகதையுடையவராவார்கள்.

கே. ப. இ. கே. எல். 4 கல்மில்ல ஓயாவுக்கு அணைகட்டுதலும் கல்மில்ல வாவிக்கு நீர்கொடுக்கும் வாய்க்காலில் தலைத்தூம்பு அமைத்தலும் வடிகால் அமைத்தலும்.

கே. ப. இ. கே. எல். 5 : கல்மில்லவாவிக்கு நீர் கொடுக்கும்வாய்க்கால அமைத்தல்.

2. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். இவ்வேலைவிஷயமான முழுவிபரங்களையும், மின்னேரியாவில் இருக்கும் கவுடுல்ல நீ. பா. பகுதிபொறியியலாளரிடமிருந்து வழக்கமான காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள், கவுடுல்ல, மின்னேரிய, பொலன்னறுவ உபபகுதிகளின் பொறியியலாளரிடமிருந்து 1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ம் தேதிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தக்காரர்கள், இல. 1 கேள்விப்பத்திரத்துக்கு ரூபாய் 25 தும் இல. 2 கேள்விப்பத்திரத்துக்கு ரூபாய் 50 கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள, மேற்கூறிய, பொறியியலாளரிடமோ, அல்லது கச்சேரியிலோ கட்டுதல் வேண்டும்.

4. எதுவிதமான கருவிகளோ, பொருட்களோ, இவ்விலாகாவில் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படமாட்டாது. மின்னேரியாவில் இருக்கும் இலாகா கிட்டங்கியிலிருந்து ஒப்பந்தக்காரருக்கு சீமேந்தும், இரும்புக் கம்பிகளும் வழங்கப்படும். கிட்டங்கியில் இருந்து பொருட்களை ஒப்பந்தக்காரர்தனது சொந்தச்செலவிலே எடுத்துச் செல்லுதல் வேண்டும். இலாகா அதற்கு பிரத்தியேக பணம் வழங்கமாட்டாது.

சி. சி. ரி. பெர்னண்டோ,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கவுடுல்ல உபபிரிவு.

மின்னேரிய, 1965 ந் ஆண்டு நவம்பர் மீ 4 ந் வ.

11-416—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## சௌக்கியப்பகுதி—கொழும்பு கூட்டு ஆஸ்பத்திரிகள்

### பாவிக்கமுடியாத வாகனத்தை வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

கொழும்பு காசில் வீதி ஆஸ்பத்திரியில் இருக்கும் சி. எல். 1697 எண் கொண்ட உபயோகிக்க முடியாத வாகனத்தை வாங்குவதற்கான மெழு கிட்டு அடைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ம் திகதி வெள்ளிக்கிழமை 12 மணிவரை கொழும்பு கூட்டாஸ்பத்திரி அத்தியட்சகரால் பெற்றுக் கொள்ளப்படும். கொழும்பு காசில் வீதி ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகருடன் ஒழுங்குசெய்து அலுவலக நேரங்களில் இந்த வாகனத்தை பார்வையிடலாம்.

2. கொழும்பு கூட்டாஸ்பத்திரி அத்தியட்சகரின் வரவுக் கணக்கில் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததின் பேரில் 1965 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரை கொழும்பு கூட்டு ஆஸ்பத்திரி அத்தியட்சகரின் கணக்குப்பகுதி அலுவலகத்தில் பெறக்கூடியனவான கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளில் கேள்விகளை நிரப்பவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்கமூலையில் " உபயோகிக்க முடியாத மோட்டார் வாகனத்தை வாங்குவதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு கொழும்பு கூட்டு ஆஸ்பத்திரி அத்தியட்சகர், பெரிய ஆஸ்பத்திரி, கொழும்பு, என்று முகவரியிட்டு அனுப்பவேண்டும். அனுப்புவரின் பெயர் முகவரி என்பன தபாலுறையின் இடது பக்க கீழ் மூலையில் எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

4. மேலே முதற் பந்தியில் குறிப்பிட்டதேதியன்று உரிய நேரம் முடிந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாய் இருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகையையும் வாசித்துக்காண்பிக்கப்படும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரருக்கு அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டவிடயம் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி வாகனத்தை எடுத்துச்செல்ல தவறினால் எதுவிதகோரிக்கைக்கும் இடமின்றி கேள்விப்பத்திர கட்டுப் பணம் பறிமுதலாக்கப்படும்.

6. எந்த ஒரு கேள்வியையேனும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கவோ கொழும்பு கூட்டு ஆஸ்பத்திரி அத்தியட்சகருக்கு உரிமையுண்டு.

டி. ஏ. ஜெயசிங்க,
அத்தியட்சகர்.

கொழும்பு கூட்டு ஆஸ்பத்திரி,
பெரியாஸ்பத்திரி,

கொழும்பு, 1965 ந் ஆண்டு கார்த்திகை மீ 3 ந் வ.

11-425—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### புனருத்தாரண வடிகால் உப-பகுதி

கொழும்பு-7, புல்லேர்ஸ் வீதியிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்கள இரண்டாம் மாடியில் எட்டாம் இலக்க அறையிலுள்ள பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால், கீழ்க் காண்பன விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், 65 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி வரையும் அதற்கு முன்னரும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 30,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இந்த வேலைக்குக் கேள்விப்பத்திரங்கள் கோரத் தகைமையுள்ளவராவர்.

| வேலையின் பெயர் | கொந்தருத்துக்காரரின பதிவு செய்யப்பட்ட தொகை | கேள்விப்பத்திரங்கள் பெறுதற்கு கட்டுப்பணம் |
|---|---|---|
| 1. முத்துராயவலாவிலுள்ள பலகலா நெற்காணிகளுக்கு வடிகால வசதிகள் ஏற்படுத்துதல் | 29,500/- .. | 50/- |
| 2. வெலி அமுனுவிலுள்ள நெற்காணிகளுக்கு வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல் | 29,000/- .. | 50/- |

3. 1965 ம் ஆண்டு டிசம்பர் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை அலுவலக வேலை நேரங்களில் புனருத்தாரண வடிகால உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் வெற்றுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் படிவங்களுக்கு விண்ணப்பிக்கும் போது ஒப்பந்தக்காரர்கள் தங்களது பதிவுப் புத்தகங்களையும், தாங்கள் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவரா என்பதை ஆராயும் பொருட்டுத் தற்பொழுது இத்திணைக்களத்தில் தாங்கள் கைக்கொண்டுள்ள வேலைகளும் அவைகளின் பெறுமதிகளும் அடங்கிய உறுதிப்பத்திரமொன்றையும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பார்வைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்திலாவது அல்லது வேறெந்தக் கச்சேரியிலாவது கட்டுப்பணமாக ரூபா 50/- கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உடையவர்களுக்கு மட்டுமே வெற்றுப்படிவங்கள் வழங்கப்படும்.

4. இக்கேள்விப் பத்திரங்களைப் பற்றிய மேலதிக விபரங்களைப் புனருத்தாரண வடிகால் உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. டி. பி. பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
புனருத்தாரண வடிகால் உப-பகுதி

8 ம் இலக்க அறை, 2 ம் மாடி.
நீர்ப்பாசனத் திணைக்களம்,
புல்லேர்ஸ் வீதி, கொழும்பு 7.
5.11.65.

11-399—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

## வளிமண்டல ஆய்வுப்பகுதி

### ஜல வாயு தயாரிப்பதற்கு வேண்டிய அலுமினியச்சீவல் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரம்

வளிமண்டல ஆய்வுப்பகுதிக்கு 40 அந்தர் அலுமினியச் சீவல் தேவைப்படுகிறது. இது கடைசல் சீவல்கள், வெட்டித்தள்ளிய, சிறு துண்டுகள், மெல்லிய தகடுகள் ஆகியன கெண்டதாய் தகரக்கொல்லர் கத்திரிக்கோலால் வெட்டக் கூடியனவான மெல்லிய கீற்றுக்களாக இருக்கவேண்டும். மெல்லிய தகடுகளாகக் கொடுப்பதானுல் கடதாசியும் மையும் மற்று பிற பொருட்களும் நீக்கியே கொடுக்கப்படல்வேண்டும்.

1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ந் திகதியளவில் இது தேவைப்படுகிறது.

இப்பொருளைக் கொடுப்பதற்காக உத்தேசிப்போர் மாதிரிகளுடன் தங்கள் கேள்விப்பத்திரங்களை உறையிலிட்டு அரக்கு மெழுகு வைற்றி முத்திரையிட்டு கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு 1965 நவம்பர் மாதம் 25 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் சேரத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

கேள்விப்பத்திரங்களில் குறிப்பிடும் விலை ஒரு அந்தருக்கானதும் சாக்குகளிலிட்டு இக்கந்தோருக்குச் சேர்ப்பிப்பதற்கானதுமாயிருத்தல் வேண்டும்.

எல். ஏ. டி. ஐ. ஏகநாயக்கா,
அதிபர்,
வளிமண்டல ஆய்வுப்பகுதி.

வளிமண்டல ஆய்வுப்பகுதி,
புல்லர்ஸ் வீதி,
கொழும்பு 7, 1965 ந் ஆண்டு ஒக்டோபர் மீ 30 ந் உ.

11–238—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மகாகனத்தராவ உபபிரிவு

மகாகனதராவ உபபிரிவில் குருளுவேவாதிட்டத்தின் 13A வெட்டு வாய்க்காலுக்கு நீர்ப்பாசன வசதிகள் அளிக்கும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள வடமத்தியபிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 7 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அதன் பின் உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத்திணைக்களத்தில் 20,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத்தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்கான வெற்றுப்பத்திரங்களை மகாகனத்தராவ, அனுராதபுரம், பதவியா ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனக் காரியாலயங்களில் 3.12.65 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணி வரை கேள்விக்கட்டணமாக ரூபா 25/– செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இக்கேள்விக் கட்டணத்தை ஒரு கச்சேரியிற் செலுத்திப் பற்றுச் சீட்டுக்காட்டினுலும் போதுமானது. கேள்வியாளராக முன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

4. இக் கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் மகாகனத்தராவ உபபிரிவு நீர்ப்பாசனப்பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகா கனத்தராவை உபபிரிவு.

மிகிந்தலை, 1965 ம் ஆண்டு கார்த்திகை மீ 4 ந் உ.

11–372—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## ஏல விற்பனவு

இதன்கீழ் குறிக்கப்பட்ட பொருட்கள் இம்மாதம் 30 ம் திகதி காலை 9.30 மணிதொடக்கம் அரசாங்க பண்டசாலைத்துறையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இரும்புத்தகடுகள், இரும்பு வளையங்கள், மோட்டார் உதிரிப் பாகங்கள், 13 பழைய டயர், 2 பழைய ரியூபுகள், 6 பற்றறிகள், பழைய சைக்கிள் பாகங்கள் முதலியன.

இப்பொருட்களை நவம்பர் மாதம் 29 ம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் அரசாங்க பண்டசாலைத் துறையில் பார்வையிடலாம்.

விற்பனை முடிந்தவுடன் பணம் கட்டிபொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

எஸ். ஏ. பி. ரூபசிங்க,
அரசாங்க பண்டசாலை அதிபர்.

அரசாங்க பண்டசாலைத்துறை,
கொழும்பு, 1965 ந் ஆண்டு நவம்பர் மீ 5 ந் உ.

11–429—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## பொது வைத்தியசாலை, கொழும்பு

### பிரசித்த ஏல விற்பனவு

1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெள்ளிக்கிழமை 3 ம் திகதி பிற்பகல் 1 மணிக்கு கொழும்பு பொது வைத்தியசாலையில் கீழ்க்குறிப்பிட்ட நோயாளிகளின உரிமை கோரா பொருட்கள் ஏலவிற்பனவு செய்யப்படும்.

2. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் ஏல விற்பனவுமுடிந்ததும் நோயாளிகளின் பொருட்களுக்குரிய முழு தொகை பணத்தை கட்டி பொருட்களை உடனே அகற்றி செல்ல வேண்டும்.

3. இவ் ஏல விற்பனவு எதுவித கேள்விக்கிடமின்றி நிராகரிப்பதற்கோ அல்லது விற்பனவை பிற்போடுவதற்கோ அல்லது விலைகேட்டலை தடுப்பதற்கோ சௌக்கிய அதிகாரிக்கு உரிமை உண்டு.

4. இங்கு குறிப்பிட்ட பணம் அல்லது பொருட்களை பெற்றுக்கொள்ளும் உருமை உடையோர், இவ் விளம்பரம் அரசாங்க வர்த்தமான பத்திரிகையில் வெளியிட்ட எழு நாட்களுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும், இல்லையேல் உரிமை கோரா பணம், வருமானமாக அறவிட்டும் உரிமை கோரா பொருட்கள் பொது ஏலத்தில் விற்பனவாகும்.

5. மேலதிக் விபரங்களுக்கு கொழும்பு பொது வைத்தியசாலை அதிகாரிக்கு விண்ணப்பிக்கவும்.

பொது வைத்தியசாலை,
கொழும்பு.

டீ. ஏ. ஜயசிங்க,
வைத்திய அதிகாரி,
கொழும்பு கூட்டுவைத்தியசாலைகள்.

| பெயர் | சேர்ந்த திகதி | பொருளின் இலக்கம் | பணம் ரூ. ச. | உரிமைகோரா பொருட்கள் |
|---|---|---|---|---|
| தெரியவில்லை | 2. 1.57 | 632 | 5 38 | — |
| பெணுண்டோ | 30.12.56 | 633 | 15 60 | — |
| யுவானிஸ அப்விஸ | 6. 1.57 | 636 | 6 04 | ஒரு பேனைக் கத்தி, ஒரு குரு |
| டேவிட் பெறேரு | 6. 1.57 | 640 | 2 00 | — |
| அன்னம்மா சொயிசா | 17. 7.56 | 647 | 23 40 | — |

| பெயர் | சேர்ந்த திகதி | பொருளின் இலக்கம் | பணம் ரூ. ச. | உரிமைகோரா பொருட்கள் |
|---|---|---|---|---|
| ச. சொயிதா பெறேரு | 7. 2.57 | 651 | — | ஒரு சோடி காதணி |
| பெயர் தெரியவில்லை | 18. 2.57 | 654 | 8 00 | — |
| யோன் சிங்கோ | 15. 2.57 | 658 | 2 00 | — |
| ம. லூசியன் பெறேரு | 17. 2.57 | 663 | — | ஒரு சூரு |
| வி. ஆ. பிறேமதாச | 13. 3.57 | 668 | 30 00 | — |
| சறனேலிஸ் சிங்கோ | 27. 3.57 | 670 | 5 52 | — |
| கொறனேளிஸ் அப்பு டயஸ் | 26. 3.57 | 671 | 361 00 | — |
| யயசிங்க | 6. 3.57 | 672 | — | ஒரு சூரு |
| அ. அ. சியதோறிஸ் | 8.11.56 | 675 | 5 22 | — |
| பண்டுசேனு | 6. 5.57 | 682 | 0 80 | — |
| யினதாசா | 28. 5.57 | 683 | — | ஒரு தங்க நிற மோதிரம் |
| சாளிஸ் அப்புகாமி | 10. 4.57 | 684 | — | ஒரு சூரு |
| முத்துசாமி | 6. 5.57 | 686 | 16 10 | — |
| சாப்பற் பக்மன் | 27. 3.57 | 697 | — | ஒரு தங்கநிற மோதிரம் |
| ம. சில்வா | 5.12.57 | 698 | — | ஒரு மோதிரம், ஒரு பின்னம் |
| மேறி | 19.12.57 | 699 | — | ஒரு தோடு |
| றொசலின் பெறெரு | 15. 4.57 | 700 | — | 3 மோதிரம் |
| ஜேனு இச்சில் | 6. 2.56 | 701 | — | 1 அச்சரம் |
| பொடிகாமி | 9. 8.56 | 702 | — | ஒரு மோதிரம் |
| சீலவதி ஜேனு | 30. 1.57 | 703 | — | ஒரு சூரு |
| பியாவதி | 20. 3.57 | 704 | — | 2 மோதிரம் |
| சோமா | 28. 2.57 | 705 | — | 2 காதணிகள் |
| பெறுண்டு | 6. 4.56 | 706 | — | ஒரு சோடி காதணி |
| பொடிகாமி | 23. 3.56 | 708 | — | ஒரு மோதிரம் |
| பொடிகாமி | 23. 4.56 | 709 | 0 77 | — |
| சமனதாசா | 21. 6.57 | 722 | 1 05 | — |
| கதறின் | 1. 6.57 | 728 | — | 2 மோதிரங்கள், வெள்ளி |
| றிர்னல் | 2. 3.57 | 729 | — | ஒரு சோடி காதணி |
| மகி | 23. 2.57 | 730 | — | ஒரு சோடி காதணி |
| சுமனதாச | 17. 7.57 | 742 | 12 42 | — |
| சாளிஸ் பெறுனண்டோ | 26. 7.56 | 749 | 3 65 | 14 வெள்ளி காசு |
| அயஸ்வறனா | 18. 7.57 | 753 | 1 34 | 2 பித்தளை மோதிரம் |
| சண்முகம் | 12. 8.57 | 758 | 0 53 | — |
| சறனேலிஸ் | 13. 8.57 | 761 | 1 33 | — |
| பொடி அப்புகாமி | 25. 7.57 | 766 | 15 00 | — |
| சய்மன் சில்வா | 17. 7.57 | 772 | 11 98 | 1 பண பை, 1 பேனை |
| றியினு பிறீஸ் | 20. 7.57 | 776 | — | 1 அச்சிரம், 1 சோடி தோடு |
| விலாவதி | 27. 7.57 | 777 | — | 1 சோடி தோடு 1 சோடி காப்பு |
| றன்சோகாமி | 2. 8.57 | 778 | — | 1 சோடி காப்பு |
| சிற்றி பறிடா | 26. 6.57 | 779 | — | 1 சோடி தோடு |
| ருமசாமி | 15. 9.57 | 781 | 10 16 | — |
| இன்கோ காமி | 6.10.57 | 797 | 10 66 | — |
| முத்துலிங்கர் | 12.10.57 | 800 | 10 85 | — |
| ரிக்கிறி பண்டா | 7.11.57 | 806 | 30 00 | — |
| பொடி காமினி | 11.11.57 | 808 | 22 90 | — |
| இளையதம்பி | 12.11.57 | 812 | 7 00 | — |
| சபறர் | 24.11.57 | 819 | 18 20 | — |
| குறுசாமி | 1.12.57 | 824 | — | 1 மோதிரம் |
| யோசைப் | 26.12.57 | 831 | 7 00 | — |
| பினுண்டோ | 23.12.57 | 832 | 20 00 | — |
| ருசபக்ச | 31. 1.58 | 14 | 3 75 | — |
| யோன் ருசபக்ச | 12. 2.58 | 19 | — | 1 வெறும்பை, ஒரு மோட்டார் செலுத்தும் அனுமதிப் பத்திரம், 1 பெற்றோல் கூப்பன், 1 இன்சூரன்ஸ் காட் |
| பொடி அப்புகாமி | 3. 3.58 | 30 | 3 05 | — |
| சாளிஸ் சிங்கோ | 2. 3.58 | 31 | 25 73 | — |
| நாறயனன் | 5. 3.58 | 33 | 8 0 | — |
| யயசூரிய | 8. 3.58 | 36 | 7 60 | — |
| கபறுல | 4. 4.58 | 39 | 12 0 | — |
| விக்கிறமசிங்க | 5. 4.58 | 46 | 17 73 | — |
| சப்பையா | 20. 5.58 | 61 | 23 00 | — |
| கிறிசிறினு | 29. 6.58 | 71 | 11 7 | — |
| அடுமே | 4. 7.58 | 72 | 1 33 | — |
| றம்மெனிக்கா | 30. 7.58 | 91 | -- | ஒரு சோடி தோடு, ஒரு சோடி காப்பு |
| இலிசா டயஸ் | 20. 9.58 | 99 | 3 29 | — |
| விக்ரோறியா பெரேரு | 30.10.58 | 103 | 5 00 | — |
| தொமஸ் | 10.11.58 | 107 | 5 00 | — |
| லெமிஸ் | 15.11.58 | 109 | 12 72 | — |
| செல்வதுரை | 29.11.58 | 118 | 2 00 | — |
| யேமிஸ் அப்பு | 13.10.58 | 121 | 7 19 | — |
| கெந்திறிக் அப்பு | 20. 2.59 | 134 | 20 00 | — |
| ஏபிறகாம் | 29. 5.59 | 148 | 12 59 | — |
| பொ. சப்பையா | 10. 8.59 | 154 | 21 62 | 1 சோடி கண்ணாடி கூட்டம் |
| முரவிப் | 18. 9.59 | 158 | — | 2 சட்டை பொத்தான் |

| பெயர் | சேர்ந்த திகதி | பொருளின் இலக்கம் | பணம் ரூ. ச. | உரிமை கோராபொருட்கள் |
|---|---|---|---|---|
| பிணனெறிஸ் காமி | 8. 9.59 | 159 | 203 53 | — |
| கலகெடிற | 22. 5.59 | 162 | 2 75 | — |
| யெமிஸ் அப்பு | 13. 5.59 | 163 | 0 26 | — |
| கொறனேலிஸ் அப்பு | 24. 5.59 | 164 | 8 75 | — |
| சமனதாச | 13. 5.59 | 165 | 0 35 | — |
| சிடின் அல்வின் | 4.11.59 | 166 | 15 00 | — |
| மூகமது | 31. 1.60 | 181 | 2 00 | — |
| ராசதுரை | 27. 5.60 | 196 | 4 53 | 1 கைகடிகாரம் |
| மறியன் பெனுண்டோ | 21. 5.60 | 198 | — | 2 தங்கநிற காதணி |
| மாறியா பியேறு | 3. 8.60 | 199 | — | 2 வெள்ளி நிற காப்பு, 2 தங்க காதணி |
| பெயர் தெரியவில்லை | 11. 6.60 | 200 | 12 28 | — |
| பிறுண்டோ | 6. 7.60 | 202 | 25 00 | — |
| பெயர் தெரியவில்லை | 5.11.60 | 223 | 2.45 | — |
| ச. கமிட் | 7. 1.61 | 232 | 14 10 | — |
| யெமிஸ் | 15. 2.61 | 236 | 180 00 | — |
| பெயர் தெரியவில்லை | 8. 2.61 | 237 | 15 00 | — |
| அந்தோனி அப்பு | 18. 5.61 | 244 | 15 00 | — |
| காளிதாசன் | 22. 5.60 | 256 | 5 00 | 1 பண உறை, 1 அச்சரம் |
| யெமிஸ் | 12. 2.62 | 265 | 5 09 | — |
| திச்சாட் | 4. 3.62 | 274 | 21 65 | — |
| இல்லியன் | 4. 3.62 | 282 | 2 11 | — |
| தருமசேன | 21.12.62 | 289 | 315 00 | — |
| யௌனேறிஸ் சிங்கோ | 19.11.62 | 290 | 20 00 | — |
| தருமசேன | 21.12.62 | 291 | — | 1 இன்விக்ரா கை கடிகாரமும் 2 கல் பதித்த மோதிரமும் |
| இஸ்மெயில | 25. 1.63 | 293 | 70 00 | 1 புலா கைகடிகாரம் |
| விக்கிறமரத்தின | 15. 2.63 | 295 | 103 00 | — |
| கறலின் நோனு | 7. 1.63 | 296 | 28 75 | — |
| யயதிலக்க | 12. 3.63 | 297 | 15 00 | — |
| லோறன்ஸ் | 4. 3.63 | 298 | 24 58 | — |
| அப்துல் கமிட் | 1. 8.63 | 302 | 23 55 | — |
| மடத்தி | 18.11.63 | 306 | 14 62 | — |
| குஸ்மதாச | 14. 5.64 | 316 | 7 00 | — |
| யோசேப் | 14. 5.64 | 317 | 1 34 | — |
| ருமசாமி | 14.5.64 | 318 | — | ஒரு வெள்ளிச் சங்கிலி |
| இட்சின் பெறேரு | 2.10.64 | 325 | 45 00 | — |
| யொன் பெறெரு | 13.11.64 | 1 | 21 90 | — |

11—401—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,556

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடைபிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி.ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி.ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை நஸ்னேஸ் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.